# மனம் புகுந்த கள்வன்

( பொய்கையடியான் )

பேயவள் உயிரை முலையுடன் சேர்த்துண்டு
மாயமாய் வந்த சகடனை உதைத்துக்கொன்று
பேயனேன் என் மனதுள் புகுந்து நின்று
1. மாயம் பல செய்யும் நின்திறன் யாரறிவார் ?

தாழியுடைத்துண்ட வெண்ணை போறாவென்று
ஏழுலகமுண்டுவுமிழ்ந்து மகிழ்ந்த மாயனே !
ஆழியாகயென் மனதானதோ நீ கண்வளர
2. ஏழுமலையானே ! நானறியேன் உன் மாயமே !

சூடிக்கொடுத்த மாலையைச் சூடி மகிழ்ந்தவனே
வாடினேன் மனம்நொந்தேன் உனைக்காணவே
தேடியலைந்தேன் நீயுறையுமிடமெல்லாம்
3. நாடிவந்தே என் மனதுள் உறைபவனே !

வெள்ளத்தணைக் கிடந்த மாயனே வண்ணனே
கள்ள மனத்துடை எனையும் ஒருபொருட்டாக்கி
மெள்ள வந்தே என் மனதமர்ந்த மாயக்கள்வனே
4. உள்ளவாறு நானறியேன் உன்தன் மகிமைதனையே !

பரியது முகங்கொண்டு மறைகளைத்தந்தவனே
பரிவுடன் வானவர் துயர்துடைக்க வந்தவனே
கரியதன் குரல் கேட்டு புள்ளேறி சேர்ந்தவனே
5. பிரியேன் என் மனதுள் வந்தமர்ந்தவனையே !

பொய்யாய் இதுநாள் தொழுதெழுந்தேன்
செய்யாள் உறைமார்பா ! உன் தனையே !
உய்யவழியறியாதிருந்த என்னையுமே
6. மெய்யன்புடன் நின் திருவடி சேர்த்தனையே !

குன்றமது எடுத்து ஆனிரைகளைக் காத்தாய்
கன்றதாய் வந்தவனைவீசிக் காய்தனைசாய்த்தாய்
அன்று ஆழ்கடல் மஞ்சமாக்கி கண் சோர்ந்தாய்
7. இன்று அடியேன் நெஞ்சமதைப் புகலாச் சேர்ந்தாய் !

மாயமாகவந்த மானைப்பின் தொடர்ந்துபோக
தீயரக்கன் உயிரதனைச் சிலையால் நீமாய்க்க
தூயமனமுடைஅடியார்கள் மனமுறைபவனே
8. பேயன் என்னையும் பொருட்டாக்கி என்மனம் சேர்ந்தாயே !

சங்கமது கைக்கொண்டு சமர்தனை முடித்து
அங்கமெலாம் அம்புபட்டு வடுவாகி , நின்
தங்கநிற மேனியது கறுத்துப் போனதாய்
9. தங்கயென் மனதையும் தேர்ந்தனையோ ?

நின்பால் மனம்செல்லாது அலைந்தொழிந்தேன்
அன்பில்லா எனையுமொரு பொருட்டாக்கி
என்பால் கருணைகொண்டுயெனை ஆட்கொண்ட
10. உன்பால் மனம்வைத்தே சரணடைந்தேனே !